GOVERNMENT ARTS AND SCIENCE COLLEGE FOR WOMEN KODAIKANAL

# அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி

கொடைக்கானல் - 624 101

**தமிழ்த்துறை குறிஞ்சி மன்றம்**

மற்றும்

**கவிமுகி**


பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்

Kavimugi International Journal of Tamil Research is a Peer reviewed Printed Journal

**ISSN 2950-6611**


## பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்விதழ்

# சங்ககால முதல் சமகாலம் வரை இலக்கியத்தில் நோக்கும் போக்கும்

**30 அக்டோபர் 2023**


**பதிப்பாசிரியர்**

முனைவர் **ர.மங்கையர்க்கரசி**



**அடிப்புற அரங்கச் செயற்பாட்டுப் பேரவை**

இலங்கை.



Scanned with ACE Scanner

# பொருளடக்கம்

1. வேட்டுவச் சடங்காற்றுகையின் குணமாக்கல் தன்மைகளும் அதன் இன்றைய தேவையும்: கிழக்கிலங்கை களுவன்கேணி வேடர்களை மையப்படுத்திய ஆய்வு 001
க.பத்திநாதன்

2. பல்லியத்தில் புதிய இசை உருவாக்கம்: ஓர் ஆற்றுகை மைய ஆய்வு 007
ர. மாக்கஸ் ஐவர்

3. வல்வை முத்துமாரி அம்மன் கோவில் இந்திர விழாவின் கலை அழகியல் வெளிப்பாடு: யாழ்ப்பாண பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 014
பிரபாகரன் பிரபுதாஸ்

4. கம்பன் கண்ட வில்லின் செல்வன் 019
முனைவர்.ர.மங்கையர்க்கரசி

5. கவிஞர் சிற்பியின் கவிதைகளில் அடித்தளத் தொழிலாளர்கள் நிலையும் - மேம்பாடும் 024
முனைவர் அ. பீட்டர்ராஜ்

6. குறுந்தொகை காட்டும் தொழில் 034
முனைவர் பொ. அமுதா

7. நெடுநல்வாடையில் கட்டடக்கலை 037
முனைவர் வே.வளர்மதி

8. முல்லைவாணன் கவிதையில் இயற்கை 043
ப.இளம்பரிதி

9. சங்ககாலத் தமிழ் வாணிகர் 048
முனைவர்.ஜோ.பிரின்ஸ்

10. பொருநராற்றுப்படையில் நிலவியல் கூறுகள் 052
முனைவர் கி. மலர்விழி

11. தமிழில் தலித் பண்பாடு - அறிமுகம் 056
முனைவர் க.தங்கராஜ்

12. தமிழ் இலக்கியங்களில் அறவியல் சிந்தனைகள் 059
சை. ஜாபர்

13. அம்பை சிறுகதையில் உளவியல் சிந்தனைகள் 061
க.பாரதி

14. சீவகசிந்தாமணியில் கலைத்திறன்கள் 064
கல்யாணசுந்தரம் கி

15. பண்டைத்தமிழரின் அறிவுக்கருவூலம் - முல்லைக்கலி 067
முனைவர் ஆ. தேவ்மாலா,

16. கடலோடி ஒரு பார்வை 070
முனைவர் க. லதா,

17. சங்க நூல்களில் 'பாவை' பற்றிய பார்வை 072
முனைவர் இரா.பொன்னி

Scanned with ACE Scanner

மலர் 2 சிறப்பிதழ் 6
ISSN 2950-6611
கவிமுகி பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்
Kavimugi International Journal of Tamil Research

# சங்க நூல்களில் ‘ பாவை’ பற்றிய பார்வை

முனைவர் இரா.பொன்னி
உதவிப் பேராசிரியர்
பாத்திமா கல்லூரி, மதுரை.
9894831987 ponniramaseshan@gmail.com

பண்டைத் தமிழர்கள் நாகரிகமிக்க பண்பாடுகள் அறிந்த வாழ்வுதனை வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கு சங்க இலக்கியங்களே சான்றுகள். சங்க இலக்கியங்களில் விலங்குகள், மரங்கள், புழங்கு பொருட்கள் என இடம்பெறும் அனைத்துமே பண்டைத்தமிழரின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுபவையாகத் திகழ்கின்றன. தமிழினத்தவரின் வாழ்வியல் களஞ்சியமாகத் திகழும் இச்சங்க நூல்களுள் ‘பாவை’ எனும் சொல்லாட்சி பெண்ணாக, தெய்வமாக, பூதமாக, விளையாட்டு பொம்மையாக பயன்பட்டுள்ளமையை இக்கட்டுரை ஆராய்கிறது.

பாவை என்ற சொல்லுக்கு பொம்மை என்று பொருள் உண்டு. பெண், பதுமை, உருவம், கருவிழி என்றெல்லாம் பலவகைகளில் பொருள் கொள்ளவும் முடிகிறது. இவை தவிர,

**“கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அதுவிளிந் தற்று”** *(332)*

என்று திருக்குறளிலும் பாவைக்கூத்து பற்றிய குறிப்புகள் உள்ளன. மேலும் வள்ளுவர் உள்ளத்தில் சிறிதளவும் நாணமில்லாது இயங்கும் மக்கள், கயிறு கொண்டு இயக்கும் மரப்பாவைக்கு நிகர் என்றும் சாடுகிறார்.

**“நாண் அகத்தில்லார் இயக்கம் மரப்பாவை**
**நாணால் உயிர்மருட்டி அற்று.”** *(1020)*

**களத்துப் பாவை**

களத்தில் நடமாடும் கூத்தியைப் பாவை என்று நற்றிணை பாடல் குறிப்பிடுகிறது. கூத்துக் கலைஞர்கள் பெண்மகளைக் கூத்தி என்றழைப்பர். களத்தில் கூத்தாடும் விறலிப் பெண் பாவை போல தலைவி இருப்பதை,

**“விழவொழி களத்த பாவை போல”** *(நற். 360:2)*

எனும் வரிச் சுட்டுகிறது.

**வெறிகொள் பாவை**

தெய்வம் வந்து ஏகுமாறு வெறியாடும் ஆண்மகனைத் தேவராளன் என்றும்
ஆண்மகளைத் தேவராட்டி என்றும் சங்க நூல்கள் பகர்கின்றன. சிலம்பில் சாலினி தேவராட்டியை இளங்கோவடிகள் கூறுவதையும் நாம் காணலாம். அதே போன்று,

**“வெறிகொள் பாவையில் பொலிந்த என்”** *(அகம். 370:14)*

என்று வெறியாட்டம் மேவிய மகள் போன்று பொலிவுற்ற அழகு என்பதனை மேற்கூறிய அகநானூற்று வரி பறைசாற்றும்.

**கொல்லிப்பாவை**

பெண்ணாக, தெய்வமாக, அச்சம் தரக்கூடிய பூதமாக விளங்கிய கொல்லிப்பாவை பற்றிய குறிப்புகளும் சங்க நூல்களுள் காணக்கிடைக்கின்றன.

அகநானூற்று 136-ல் மணப்பெண்ணுக்கு மண்ணுமங்கலம் செய்து பாவை வழிபாடு செய்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

**“மண்ணு மணி அன்ன மாஇதழ்ப் பாவைத்**
**தண் நறு முகையொடு வெண் நூல் சூட்டி”**

பெரிய அணிகலன்கள் அணிந்த அச்சம் தரக்கூடிய பெரிய கருவிழிகள் கொண்ட தெய்வமாக கொல்லிப்பாவை விளங்கியதாக குறுந்தொகை கூறுகிறது. நற்றிணையோ மாய இயற்கைப் பாவை என்கிறது.

**“பெரும்பூட் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்**
**கருங்கட் தெய்வம் குடவரை எழுதிய**
**நல்லியற் பாவை அன்ன ....”** *(குறுந். 100:5-6)*
**“ ----- ----- ---- பயங்கெழு கொல்லி**
**நிலைபெற கடவுள் ஆக்கிய**
**பலர்புகழ் பாவை அன்னநின் நலனே”** *(அகம். 209:15-17)*

இவ்வாறு இயற்கை தெய்வமாக விளங்கப்படுபவள் பாவை தலைவியானவள், கருங்கட் தெய்வம் குடவரை எழுதிய நல்லியல் பாவை அன்ன மெல்லிய இயல்பை உடையவளாம் என்று பரணரும் பாடுகிறார். *(குறுந்தொகை 89ம1562)*

**“தெய்வம் எழுதிய வினைமாண் பாவை அன்னோள்”**
*நற்றிணை 185*

**பூத உருவம்**

கொல்லிமலையில் வீற்றிருக்கும் பாவை பூதம் போன்றது என்று நற்றிணை மூலம் அறிய முடிகிறது.

**“கொல்லிக் குடவரைப் பூதம் புணர்த்த புதியல்”** பாவை.
*நற்றிணை 192*

கடவுள் உருவம் எழுதிய பாவை போல் தலைவி மடப்பத்தன்மை கொண்டவளாம்.ன்4தி பரணர் அகநானூற்றில் குறிப்பிடுகிறார்.

**“பாவை அன்ன வனப்பினள் இவள்”** *(நற்றிணை-301-6)*
**‘வல்வில் ஓரி கொல்லிக் குடவரைப்**
**பாவையின் மடவந் தனளே”** *(குறுந்தொகை-100-5-6)*
**“ஓவத் தன்ன இடனுடை வரைப்பிற்,**
**பாவை அன்ன குறுந்தொடி மகளிர்”** *(புறநானூறு-251-1-2)*

என்னும் அடிகள் வாயிலாகவும் தலைவியின் அழகு நலம் கொல்லிப்பாவை தெய்வத்தொடு ஒப்பிட்டமையை உணரலாம். களவுக்காலத்தில் தாம் வரும் பாதையின் துன்பம் எண்ணி அஞ்சிய தலைவியிடம் தலைவன்,

Scanned with ACE Scanner

மலர் 2 சிறப்பிதழ் 6
ISSN 2950-6611

கவிமுகி பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்
Kavimugi International Journal of Tamil Research

பயன்மிக்க பலா மரங்களைக் கொண்ட கொல்லிமலையின் மேற்குப் பகுதி சார்ந்த மலையிடத்தே முன்பு தெய்வத்தாலே வடி வமைத்து வைக்கப்பட்ட புதிய வகையில் இயங்குகின்ற பாவையானது, விரிந்து பரவும் சூரியனது வெயிலிலே தோன்றி நின்றது போன்ற உன் அழகிய நலம் கருதி வருவேன். அவ்வாறு வரும்போது உன் உடம்பிலிருந்து பரவும் ஒளியே எங்கும் பரவி இருளைப் போக்கும் நீ அஞ்ச வேண்டாம் என்கிறான். இதனை,

**"பயம் கெழு பலவின் கொல்லிக் குட வரைப்**

**பூதம் புணர்த்த புதிது இயல் பாவை**

**விரி கதிர் இள வெயில் தோன்றி அன்ன, நின்**

**ஆய் நலம் உள்ளி வரின், எமக்கு**

**ஏமம் ஆகும், மலைமுதல் ஆறே."** *(நற்றிணை-192-8-12.)*

**விளையாட்டுப்பாவை**

மனமகிழ்ச்சி, பொழுதுபோக்கு, உடல் வலிமை என இவற்றிற்காக விளையாடுவது விளையாட்டு. ஆண்கள், பெண்கள்,சிறுவர், சிறுமியர் என அனைவரும் விளையாட்டுகளில் ஈடுபாடு கொண்டுள்ளதை சங்க இலக்கியங்களில் காணலாம். சிறுமியர் தம் தோழியரோடு விளையாடுவது அறச்செயலாகக் கருதப்பட்டது. இதனால் உள்ளும் உடலும் வலிமையுறும் என்பதனை,

**"விளையாடு ஆயமொடு ஓரை ஆடாது**

**இளையோர் இல்லிடத்து இற்செறிந்திருத்தல்"**

**அறனும் அன்றே; ஆக்கமும் தேய்ம்"** *(நற்றி.68:1-3)* எனும் வரிகள் எடுத்தோதுகின்றன. சின்னஞ்சிறு சிறுமியர் பருவ விளையாட்டுகளில் ஒன்று பாவைப் பொம்மை செய்வித்து விளையாடுதல். பால் வராத முலை கொண்டு உண்ணாத பாவைக்கு ஊட்டி விளையாடுகிறாள் சங்ககாலச் சிறுமி. இதனை,

**"உறாஅ வறுமுலை மடாஅ**

**உண்ணாப் பாவையை ஊட்டுவோளே"** *(ஐங்குறு நூறு 128:2-3)*

என்ற பாடல் வரிகள் உணர்த்தும். திருமுருகாற்றுப்படையிலும் வரிந்து கட்டப்பட்ட பந்தும் பாவையும் வைத்து விளையாடியமையைக் காணலாம்.

**"வரிப்புனை பந்தொடு பாவை தூங்க"** *(முருகு. 68)*

**வண்டல் பாவை**

வண்டல் மண்ணைக்கொண்டு பாவை செய்து விளையாடுதல் சிறுமியர் வழக்கம். அப்பாவை 'வண்டல் பாவை' எனப்பட்டது. தை மாதத்தில் மழை பெய்து நின்றுவிட்ட பருவத்தில் மணலில் சிறுவீடுகட்டி வண்டல் பாவை செய்து மகளிர் விளையாடுவர். சிறுமிகள் அப்பாவையை வத்து நீர்த்துறையில் விளையாடினர். இச்செய்தியை,

**"வண்டற் பாவை வரிமணல் அயர்ந்தும் (அகம்.330:2)**

**மாதர் மடநல்லார் மணலின் எழுதிய**

**பாவை சிதைத்து என அழ ——"** *(பரிபாட. 7:25-26)*

என்ற பரிபாடல் வரிகள் சுட்டும்.

**"தொண்டிரை தந்த தொண்டி ஊர்பு**

**தெண்டிரை வண்டல் பாவை அழிய**

**மண்டிரை வெறியாட்டு வெருளி அழூஉம்**

**அரியல் காண்குவை விரைதி விரைதி."**

தொள் என்றால் குழி பறி என்று பொருள். அப்படி குழி பறித்த அலைகளே தொண்டி எனும் பட்டினத்தை உருவாக்கும். ஆழத்திலிருந்து மிகக்குழைவான வண்டல் மண்ணை தெள்ளியெடுத்து கடற்கரையில் குவிக்கிறது. தலைவி அதனை எடுத்து சிறுபிள்ளை போல் பொம்மை செய்து விளையாடுகிறாள். ஆனால் அதே அலைகள் சீற்றத்தோடு அப்பொம்மையை பறித்துக்கொண்டு போய்விடுகிறது. மண்திரை அதாவது கரையை மண்கலந்து நீராட்டும் அலைகள் இப்படி வெறியோடு விளையாடுவது கண்டு தலைவி அச்சமுற்று மனம் கலங்கி அழுகிறாள்.

**"————————————பொன்னிக்**

**கரையின் மணற்பாவை நின்கணவ னாமென்று**

**உரைசெய்த மாதரொடும் போகாள் – திரைவந்து**

**அழியாது சூழ்போக ஆங்குந்தி நின்று"** *(சிலப்பு: வஞ்சினமாலை)*

இது நின் கணவன் என்று விளையாட்டாய் தோழியர் சொல்ல மணற்பாவையை அழியாது காத்து நின்றாள் சிலப்பு சுட்டும் பத்தினி.

**ஓரை**

பாவை செய்து மகளிர் விளையாடும் விளையாட்டினை ஓரை என்பர்.

**"விளையாடு ஆயமொடு ஓரை ஆடாது" (நற்றி. 68:1)**

**"ஓரை ஆயமும் உயங்கும்நின் ஒளிஎன" (அகம். 60;11)**

Scanned with ACE Scanner

கவிமுகி பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்
Kavimugi International Journal of Tamil Research

**பைஞ்சாய்ப்பாவை**

சாய் என்றால் கோரை. மலையில் வளரும் பசுமைக் கோரை ஒன்று 'பைஞ்சாய்' எனப்படும். இக்கோரையால் மகளிர் பாவை செய்து விளையாடுவர். இச்சொல் முதற்போலியாய் அமைந்து பஞ்சாய்ப் பாவை என்று வரும். இதன் நாரால் மலர்க் கோதை தொடுக்கும் வழக்கமும் அக்காலத்தே இருந்துள்ளது. ஐங்குறுநூறு இதனைப் 'பஞ்சாய்க் கோதை

**"பைஞ்சாய்ப் பாவை ஈன்றனன் யானே"** ( ஐங்குறு நூறு 383:5-6)

**"பணைத்தோட் குறுமகள் பாவை தைஇயும்**

**பஞ்சாய்ப் பள்ளாஞ் சூழ்ந்து மற்றிவள்"** (குறுந்.276:1-2)

**இயற்கையான பாவை**

இரும்பு, மரம், தாது என செயற்கையால் ஆன பாவையை சங்க காலப் பெண்கள் வைத்து விளையாடியுள்ளனர். அதே போல கையால் செய்யாது இயற்கையாகவே பாவை போல இருப்பதை செய்யாப்பாவை என்பர். இதற்கு

**"செய்யாப் பாவை வளர்ந்துகவின் முற்றிக்**

**காயங் கொண்டன இஞ்சிமா விருந்து"** (மலைபடு. 125-126)

என்ற மலைபடுகடாம் பாடல் வரிகள் சான்றாகின்றன.

**குரவம்பாவை**

குரவம்பூ, உருவத்தால் பாவை போன்று இருக்கும். பேதைப் பருவமகளிர் அதாவது ஐந்து முதல் ஏழு வயது வரை உள்ள பெண் குழந்தைகள் அதனைக் கொய்து பிள்ளையாகப் பாவித்து விளையாடுவர்.

**"——— குரவம் பயந்த**

**செய்யாப் பாவை கொய்யும் பொழுதே"** (ஐங்குறுநூறு. 344:2-3)

**இறாப்பாவை**

இறால்மீன் கைமுதலாய உறுப்புகள் போலும் முள் முதலியவற்றைப் பெற்றுப் பாவை போலத் தோன்றும். மண்ணீட்டாளரால் செய்யப்பட்ட மீன் பொம்மை போல எனும் உவமையை நற்றிணையில் காணமுடிகிறது.

முடிவலை முகந்த முடங்குஇறாப் பாவை (நற்றி. 49:3)

**அறுகம்பாவை**

பண்டைய வழக்கத்தில் அறுகம்புல்லை பாவை என்றும் வழங்கி வந்துள்ளதை அகநானூறு ,

**"மண்ணுமணி அன்ன மாஇதழ்ப் பாவைத்**

**தண்நறு முகையொடு வெண் நூல் சூட்டி"** அகம் 136

என்ற வரிகளால் அறிய முடிகிறது. இயற்கையான மலர்களால் மாலை கட்டியுள்ளனர். வாகை-மலர், முல்லை-மலர், அறுகம்பாவை ஆகியவற்றைச் சேர்த்துக் கட்டிய மாலையைத் திருமண வதுவைச் சடங்கில் மணமக்களுக்குச் சூட்டுதல் பண்டைய வழக்கமாக இருந்துள்ளமையை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

**சித்திரப்பாவை**

"சித்திரம் பேசுதடி என் சிந்தை மயங்குதடி" என்னும் கு.ம.பாலசுப்பிரமணியனின் வரிகள் பேசாத கவிதையே ஓவியம் என்பதனை உணர்த்தும். மனதில் தோன்றும் எண்ணங்களின் காட்சிப்படிமமே ஓவியம். ஓவியம் மனிதனின் குறிக்கோள் உணர்ச்சியை நன்கு காட்டும் களமாகும் என்பார் அ.ச.ஞானசம்பந்தன். (அ.ச.ஞானசம்பந்தன் ,இலக்கியக்கலை ப. 82). அத்தகு ஓவியத்தைப் பாவையாக ஐங்குறு நூறு சித்திரித்துள்ளது.

**"பாவை அன்னஎன் ஆய்கவின் தொலைய "**(ஐங்குறுநூறு. 221:2)

**சுவர்ப்பாவை**

சுவரில் எழுதப்பட்ட பாவையை நற்றிணையால் அறியமுடிகிறது.

**"——— புனைசுவர்ப்**

**பாவை அன்ன பழிதீர் காட்சி"** (நற். 252:6-7)

**பாவை விளக்கு**

கையில் விளக்கு ஏந்திய பெண்சிலையே பாவை விளக்கு. இரும்பு, பொன், பித்தளையால் செய்யப்பட்டது. யவனர்களிடமிருந்து தமிழர்களுக்குக் கிடைத்ததாக சங்க நூல்கள் கூறுகின்றன. மங்கையர் இவ்விளக்கில் நெய்யிட்டு பருத்தத் திரியிட்டு விளக்கேற்றி மாலையில் இல்லுறை தெய்வத்தை வழிபட்டுள்ளனர்.

**"பாவை விளக்கில் பருஉச்சுடர் அழல"** (முல்லைப். 85)

**"யவனர் இயற்றிய வினைமாண் பாவை**

**கையேந்து அகல் நிறைநெய் சொரிந்து"** (நெடுநல்வாடை 101-102)

சங்க நூல்கள் வழியாக பண்டைத் தமிழர்கள் வாழ்ந்த பண்பாடு மிக்க வாழ்வுதனை வாழ்ந்துள்ளனர் என்பதனை நம்மால் இனங்கண்டு கொள்ளமுடிகிறது. மேலும் விளையாட்டின் மூலம் சங்ககால மக்களின் உடல் உள்ள வலிமை, தெய்வத்தைப் போற்றுதல், கலை ஆர்வம் இவற்றையும் தெளிவுற உணரமுடிகிறது.

Scanned with ACE Scanner

GOVERNMENT ARTS AND SCIENCE COLLEGE FOR WOMEN KODAIKANAL

# அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி

கொடைக்கானல் - 624 101

விழ்வேனென்று நினைத்தாயோ?

தமிழ்த்துறை குறிஞ்சி மன்றம்

## கவிமுகி


பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்

Kavimugi International Journal of Tamil Research is a Peer reviewed Printed Journal

ISSN 2950-6611 இலங்கை


## பன்னாட்டுக் கருத்தரங்க சான்றிதழ்

அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் 30.10.2023 அன்று நடைபெற்ற

**சங்க கால முதல் சமகால வரை இலக்கியங்களின் நோக்கும் போக்கும்** என்ற பன்னாட்டுக் கருத்தரங்கில்

முனைவர் / திருமதி / திருமிகு முனைவர் இரா. பொன்னி அவர்கள்

சங்க இலக்கியங்களுள் 'பாவை' பற்றிய பார்வை என்ற தலைப்பில்

ஆய்வுக் கட்டுரை வழங்கியமைக்காக / பங்கேற்றமைக்காகப் பாராட்டிச் சான்று அளிக்கப்படுகிறது

முனைவர் **வெ.முத்துலட்சுமி**
முதன்மை ஆசிரியர்.
கவிமுகி பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ், இலங்கை

முனைவர். **ர.மங்கையர்க்கரசி**
கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்,
தமிழ்த்துறை

முனைவர் **ஜா.ஸ்.ஏஞ்சலின்**
முதல்வர், அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி,
கொடைக்கானல்


Scanned with ACE Scanner